# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 21.11.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் சூரா ஆலி இம்ரானின் 9வது வசனத்தை ஓதினார்கள்:**

அதன் பொருள்: எங்கள் இறைவா! நீ எங்களுக்கு நேர்வழி காட்டியதன் பின்னர், எங்கள் உள்ளங்களை கோணலாக்காதிருப்பாயாக. எங்களுக்கு உங்களிடமிருந்து அருளை வழங்குவாயாக. நிச்சயமாக நீயே வாரி வழங்குபவனாவாய். (3:9)

நான் ஓதிய திருக்குர்ஆன் வசனத்தின் பொருளையும் நீங்கள் கேட்டீர்கள். இந்த வசனத்தில் அல்லாஹ்வின் பண்பாகிய அல் வஹ்ஹாப் என்பதை குறிப்பிட்டுக் கூறி அவனிடம் தனது மார்க்கத்தில் வலுவாக நிலைபெறுவதற்கான துஆ கேட்கப்பட்டுள்ளது.

அல்லாஹ்வே! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கு ஏற்ப அந்த முன்னறிவிப்பை உண்மைப்படுத்தியவாறு காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு எங்களுக்கு கிடைத்தது. அல்லாஹ்வே தனது நேசத்திற்குரியவர்களின் துஆவை ஏற்றவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உம்மத்தில் பின்னவர்கள் மத்தியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரைத் தோன்றச் செய்து, தனது அருளாலும் கருணையாலும் நம்மை அவரது ஜமாஅத்தில் இணைவதற்கான தவ்ஃபீகை வழங்கியுள்ளான்.

அல்லாஹ்வே! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உமது மிகவும் நேசத்திற்குரிய அடியாராவார். உன்னிடமிருந்து தகவல் பெற்றே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த முன்னறிவிப்பை செய்துள்ளார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகைக்கு பிறகு கிலாஃபத்தின் அமைப்பு தோன்றும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவிப்பு செய்துள்ளார்கள். அந்த கிலாஃபத் நிரந்தரமானதாகும்.

அல்லாஹ்வே! நீ எங்கள் மீது கருணை காட்டியவாறு அமைப்புடன் எங்களை இணையச் செய்து விட்டாய். இப்போது எங்களது தவறுகள், தடுமாற்றங்கள் காரணமாக நீ எங்கள் மீது செய்துள்ள அருள்களிலிருந்து எங்களைப் புறக்கணித்து விடாதே என்றே நாம் துஆ செய்ய வேண்டும்.

மனிதன் தவறுகள் செய்யக் கூடியவனாக இருக்கின்றான். அவனிடமிருந்து அவ்வப்போது பலவீனங்கள் வெளிப்படுகின்றன. அல்லாஹ்வே! நாங்கள் உன் முன்னால் குனிந்தவாறு வேண்டுவதெல்லாம், எங்களிடம் எப்போதாவது வெளிப்படும் கர்வம், வெறுப்புணர்வு ஆகியவற்றின் காரணமாகவோ அல்லது எங்களது எந்த ஒரு செயலின் விளைவின் காரணமாகவோ எங்களது உள்ளங்களை கோணலாக்கி விடும் அந்த நாட்களை நாங்கள் காணாதிருக்கச் செய்வாயாக! உனது பார்வையில் வெறுக்கத்தக்கதாக இருக்கும் எங்களது செயல்கள் மூலமாக எங்களிடம் ஏற்படும் கோணல்தன்மையானது உனது கருணையிலிருந்தும் எங்களை விலக்கி வைத்துவிட வேண்டாம். எங்களை எப்போதும் இப்படிப்பட்ட துர்பாக்கிய நிலையிலிருந்தும் காப்பாற்றுவாயாக! என்று நாம் இறைவனிடம் துஆ செய்ய வேண்டும்.

இறைவன் நமக்கு காட்டியுள்ள நேர்வழியில் நிலைத்திருப்பதுடன் மட்டுமல்லாமல் இறைவனிடமிருந்து அவனது கருணையை வேண்டி துஆ செய்ய வேண்டும். எல்லா விதமான தீங்கிலிருந்தும் நம்மை பாதுகாக்கின்ற வகையில் அவனது கருணையின் போர்வையில் அல்லாஹ் நம்மை வைக்க வேண்டும். அதன் மூலமாக நமது ஈமானும் வளர்ச்சியடைய வேண்டும். நமது ஈமானிலும், நிச்சய உறுதியிலும் நாம் முன்னேறிக் கொண்டே செல்ல வேண்டும். தக்வாவிலும் நாம் முன்னேற வேண்டும். வரும் ஒவ்வொரு நாளும் கடந்த நாட்களை விட அதிகமாக நமது ஈமானிலும் தக்வாவிலும் நமக்கு முன்னேற்றத்தை வழங்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

எனவே, இந்த எல்லா கருத்துக்களையும் தன்னகத்தே கொண்டுள்ள இந்த அழகிய துஆவை அன்றாடம் ஒவ்வொரு அஹ்மதியும் தொடர்ந்து செய்து வர வேண்டும். இவ்வாறு நாம் தினமும் இந்த துஆவை செய்யும்போதுதான் நமது பலவீனங்கள் பக்கமும் நமது பார்வை இருக்கும். நமது இறைவணக்கங்கள் பக்கமும் நமது பார்வை இருக்க வேண்டும். அவர்கள் தங்கள் தொழுகைகளை பாதுகாப்பதன் காரணமாக தொழுகையும் அவர்களை பாதுகாக்கின்றது. அல்லாஹ்விற்குப் பிரியமான நற்செயல்களை செய்ய நாம் முயற்சி செய்பவர்களாகவும் நாம் இருப்போம். ஏனென்றால் இந்த நற்செயல்கள்தான் நமது ஈமானின் வளர்ச்சிக்கு காரணமாக அமையும். நேர்வழியில் நம்மை நிலைநாட்டக் கூடியதாக இருக்கின்றது. இது தொடர்பாக அல்லாஹ் கூறுகின்றான்.

**இன்னல்லதீன ஆமனூ வ அமிலுஸ்ஸாலிஹாத்தி யஹ்தீஹிம் ரப்பிஹிம் பி ஈமானிஹிம்** – நிச்சயமாக நம்பிக்கை கொண்டு அதற்கேற்ற பொருத்தமான நற்செயல்களைச் செய்பவர்களுக்கு அவர்களது நம்பிக்கையின் காரணமாக இறைவன் அவர்களுக்கு நேர்வழிகாட்டுவான்.

ஈமானுடன் நற்செயல்கள் இணையும்போது அது நேர்வழி பெறுவதற்கு காரணமாக அமையும் என்பது அல்லாஹ்வின் வாக்குறுதியாகும்.

**ரப்பனா லா துஸிஹ் குலூபனா** என்ற துஆவை ஒரு நம்பிக்கையாளர் செய்யும் போதும் அவர் தனது செயல்களையும் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப அமைத்து கொள்ள முயற்சி செய்வார்.

நாம் ஈமானை பாதுகாத்துக் கொள்வதற்கு நாம் செய்யும் துஆக்கள் நமது இறைவணக்கங்களை தொடர்ச்சியாக செய்து வரும்போதுதான் இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படும். அத்துடன் நற்செயல்களை செய்வதற்கும் நாம் முயற்சி செய்ய வேண்டும். ஜமாஅத் அமைப்புடன் வலுவான தொடர்பை ஏற்படுத்த நாம் முயற்சி செய்ய வேண்டும். சிறு சிறு உலக விஷயங்களை விட நமது ஈமானுக்குத்தான் நாம் முன்னுரிமை வழங்க வேண்டும். ஏதாவது ஜமாஅத் ஊழியருடன் தனிப்பட்ட முறையில் நமக்கு இருக்கும் வெறுப்புணர்வின் காரணமாக ஜமாஅத் அமைப்பேயே ஆட்சேபணை செய்பவராக நாம் இருக்கக் கூடாது.

இந்த துஆவை ஒருவர் செய்யும்போது எப்போதும் இந்த வழியில் ஏற்படும் தடுமாற்றங்களிலிருந்தும் தப்பிப்பதற்கும் அவர் முயற்சி செய்ய வேண்டும். முழு கவனத்துடன் இதற்காக முயற்சி செய்ய வேண்டும். ஒருவரது எண்ணத்திற்கேற்ப ஜமாஅத் அளவில் ஏதாவது தவறான தீர்ப்பு கூறப்பட்டிருந்தாலும் அது தொடர்பாக மேல் முறையீடு செய்வதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமை இருக்கின்றது. அந்த உரிமையை பயன்படுத்தி விட்டு அவர் பிரச்சனையை அல்லாஹ்விடம் ஒப்படைத்து விட வேண்டும். முழு ஜமாஅத்தின் அமைப்பின் மீதும் தப்பெண்ணம் கொள்வதற்குப் பகரமாக உலக இழப்புகளை இறைவன் தரப்பிலிருந்தும் வந்துள்ள சோதனையாக கருதி அதை சகித்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். அவ்வாறில்லாமல் தொடர்ந்து முறையீடுகளை செய்யப்பட்டு வந்தால் இது வளர்ந்து வளர்ந்து இறுதியில் முறையீடு செய்பவரை ஜமாஅத்திலிருந்தே வெளியேற்றுவதற்கு அது காரணமாக அமைந்து விடும். இதன் மூலமாக கிலாஃபத் மீதும் தப்பெண்ணம் ஏற்படுகிறது.

நமது உள்ளத்தில் ஜமாஅத் அமைப்பு தொடர்பாக எவ்வித தவறான எண்ணமும் ஏற்படாமலிருக்க அல்லாஹ் இந்த துஆவை நமக்கு கற்றுத் தந்திருப்பதுடன் நமது செயல்களும் இறைவிருப்பத்திற்கு ஏற்ப அமைய வேண்டும் என்றே அல்லாஹ் விரும்புகின்றான். ஜமாஅத் அமைப்பிற்கு எதிராக எவ்வித முறையீடும் நமது உள்ளத்தில் உருவாகக் கூடாது. மனிதன் என்ற நிலையில் நம்மை சோதனையில் ஆழ்த்தும் வகையில் ஏதாவது சம்பவம் நடந்து விட்டால் அதன் காரணமாக நமது ஈமானுக்கு தடுமாற்றம் ஏற்படுகின்ற எந்த விளைவும் அதனால் ஏற்பட்டுவிடக்கூடாது. கிலாஃபத் அமைப்பு மற்றும் ஜமாஅத் அமைப்பு தொடர்பாக ஒருபோதும் எவ்வித தப்பெண்ணமும் ஏற்பட்டு விடக் கூடாது. அல்லாஹ்வின் கருணையும் அருளும் இல்லாமல் இவையாவும் நடக்க முடியாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பைஅத்தில் நுழைந்த பிறகு நாம் பொறுப்பற்றவர்களாக ஆகிவிடக் கூடாது. மாறாக, அல்லாஹ்வின் கருணையை முன்பைவிட அதிகமாக தேட வேண்டும். அல்லாஹ் கடந்தகால நபிமார்களின் சமுதாயங்களின் உதாரணத்தை நமக்கு கூறியிருப்பதன்

நோக்கம் அவர்களும் நாம் ஈமான் கொண்டுள்ளோம். இனி நமக்கு எவ்வித நேர்வழி காட்டலும் தேவையில்லை என்று கருதியதேயாகும். யூதர்கள் பற்றியும், கிறிஸ்தவர்கள் பற்றியும் அல்லாஹ் குறிப்பிட்டுக் கூறியுள்ளான். எதிர்காலத்தில் அல்லாஹ் அவர்களுக்காக வைத்திருந்த நேர்வழிகாட்டலை மறுத்ததன் விளைவாக அவர்களிடம் சீர்குலைவு ஏற்பட்டது. தனது அறிவு, எண்ணம் காரணமாக மனிதனது எண்ணம் ஒரு குறுகிய எல்லைக்குட்பட்டதாக செயல்படும்போது அதற்கு காரணம் தப்பெண்ணமாகத்தான் இருக்கின்றது. அவர்களிடம் சீர்குலைவு ஏற்படவும் இதுதான் காரணமாக இருந்திருக்கின்றது. அவர்களது உள்ளம் கோணலாகிவிட்ட காரணத்தால் அல்லாஹ் அவர்களை கோபத்திற்குரியவர்கள் மற்றும் வழிதவறிப் போனவர்கள் ஆகியோருடன் இணைத்து விட்டான். அல்லாஹ் ஒவ்வொரு தொழுகையின்போதும் ஒவ்வொரு ரக்அத்திலும் சூரா ஃபாத்திஹாவை ஓதும்படி போதித்துள்ளான். சென்றகால சமுதாயங்களிலிருந்து படிப்பினையைப் பெற்றவாறு எல்லா நேரமும் இறைவனிடமிருந்து அவனது அருளையும், கருணையையும் பெறுவதற்கே அல்லாஹ் இவ்வாறு கட்டளையிட்டுள்ளான். உங்களது உள்ளங்கள் கோணலாகி விடுவதிலிருந்தும் நீங்கள் உங்களை காப்பாற்றிக் கொள்ளுங்கள். அவ்வாறில்லையென்றால் எவ்வாறு அந்த சமுதாயங்களில் மார்க்கத்தைக் காணும் கண்கள் இல்லாமல் ஆகிவிட்டதோ, அல்லாஹ்வுடன் உள்ள தொடர்பை அவர்கள் எவ்வாறு மறந்து விட்டார்களோ அதுபோல் நீங்களும் மறந்து விட வேண்டாம். இவ்வாறு ஐவேளை தொழுகைகளில் துஆ செய்த பிறகும் கூட முஸ்லிம்களில் பெரும்பாலார் இறைவனை விட்டும் அவர்களை வெகுதூரம் விலக்கி வைக்கின்ற வழிகளைப் பின்பற்றியே சென்று கொண்டிருக்கின்றார்கள். அதற்கான அடிப்படை காரணம் தப்பெண்ணமும், தனக்குத்தான் எல்லாம் தெரியும் என்று எண்ணுவதும் ஆகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

சூரா ஃபாத்திஹாவில் அல்லாஹ் முஸ்லிம்களுக்கு இந்த துஆவையே கற்றுத் தந்துள்ளான். அதாவது **இஹ்தினஸ்ஸிராத்தல் முஸ்தகீம். ஸிராத்தல்லதீன அன்அம்த்த அலைஹிம் கைரில் மக்லூபி அலைஹிம் வலள்ளாழ்ழீன்** என்ற துஆவை கற்றுத் தந்துள்ளான்.

சஹீஹான ஹதீஸ்களின் அறிவிப்புகளிலிருந்தும் **மக்லூபி அலைஹிம்** என்பது தீயவர்களாகவும், குழப்பவாதிகளாகவும் இருப்பது யூதர்களையே குறிக்கின்றது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. அவர்கள் மஸீஹை காஃபிர் என்று கூறினார்கள். அவர்கள் சாபமிட்டார்கள். இதுபற்றி திருக்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளது. **ளாழ்ழீன்** என்பவர்கள் வழிகெட்டுபோன கிருஸ்தவப் பிரிவினர் ஆவார்கள். அவர்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை இறைவனாகக் கருதினார்கள். கிறித்தவக் கொள்கையை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். மஸீஹின் இரத்தத்தின் மீது நம்பிக்கை வைப்பதன் மூலமே இரட்சிப்பு கிடைக்கும் என்பது அவர்களது அடிப்படைக் கொள்கையாகும். மேலும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை உயிருடன் இறைவனது அரியணையில் அமர்த்திவிட்டார்கள்.

இங்கு இந்த துஆவின் பொருள் இறைவா! நீ எங்கள் மீது எத்தகைய அருளை வழங்க வேண்டுமென்றால் நாங்கள் யூதர்களாகவும் ஆகிவிடக்கூடாது. அவர்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை காஃபிராக்கி விட்டார்கள். அவரை கொலை செய்ய முயற்சி செய்தார்கள். அவ்வாறே நாங்கள் மஸீஹை இறைவனாகவும் ஆக்கிவிடக் கூடாது. கடவுள் மூன்று என்ற திரித்துவ கொள்கையையும் நாங்கள் ஏற்று கொள்ளக் கூடாது. இறுதிக் காலத்தில் இந்த உம்மத்திலிருந்து வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வருவார் என்று இறைவன் அறிந்திருந்தான். யூதர்களின் பண்புகளையுடைய முஸ்லிம்கள் சிலர் அவரை காஃபிர் என்று கூறுவார்கள் என்பதையும், அவரை கொலை செய்ய முயற்சி செய்வார்கள் என்பதையும், அவரை கடுமையான முறையில் இழிவுபடுத்துவார்கள் என்பதையும் அந்த காலத்தில் திரித்துவ கொள்கையை உடைய மதம் முன்னேற்றமடைந்திருக்கும் என்பதையும் இறைவன் அறிந்திருந்தான். பல பாக்கியமற்ற மனிதர்கள் கிறிஸ்தவர்களாக ஆகிவிடுவார்கள் என்பதையும் அந்த இறைவன் அறிந்திருந்தான். எனவேதான் அவன் முஸ்லிம்களுக்கு இந்த துஆவைக் கற்றுத் தந்தள்ளான். இந்த துஆவில் **மக்லூபி அலைஹிம்** என்ற சொற்கள் உரத்த குரலில் கூறுவது என்னவென்றால், எவர்கள் இஸ்லாத்தில் தோன்றியுள்ள மஸீஹை

எதிர்ப்பார்களோ அவர்களும் இறைவனது பார்வையில் **மக்லூபி அலைஹிம்** ஆகத்தான் இருப்பார்கள். எவ்வாறு இஸ்ரவேலர்களில் தோன்றிய மஸீஹை எதிர்த்தவர்கள் மீது இறைவனின் கோபம் இருந்ததோ அவ்வாறே இஸ்லாத்தில் தோன்றியுள்ள மஸீஹை எதிர்ப்பவர்கள் மீதும் இறைவனின் கோபம் இருக்கின்றது.

ஹதீஸ்களிலிருந்து நிரூபிக்கப்பட்டிருப்பது என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் **ரப்பனா லா துஸிக் குலூபனா பஃத இத் ஹதைத்தனா வ ஹப்லனா மி(ன்)ல்லதுன்க ரஹ்மதன். இன்னக்க அன்த்தல் வஹ்ஹாப்** (3:9) என்ற துஆவை அதிகமாக செய்து வந்துள்ளார்கள்.

**ஹஸ்ரத் ஸஹர் பின் யோசப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

நான் உம்மு ஸல்மாவிடம் நம்பிக்கையாளர்களின் தாயே! **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்** உங்களிடம் இருக்கும் சமயத்தில் எந்த துஆவை செய்து வந்தார்கள்? என்று கேட்டேன். அதைக் கேட்ட உம்மு ஸல்மா அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் **யா முகல்லிபுல் குலூபி ஸப்பித் கல்பி அலா தீனிக்** – உள்ளங்களைத் திருப்புகின்றவனே! எனது உள்ளத்தை உனது மார்க்கத்தில் நிலைத்திருக்கச் செய்வாயாக என்ற துஆவை செய்து வந்தார்கள் என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் உம்மு ஸல்மா (ரலி) அவர்கள் தொடர்ந்து கூறினார்கள்:**

நான் **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம்** தாங்கள் இந்த துஆவை தொடர்ந்து செய்து வருவதற்கான காரணத்தைக் கேட்டேன். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உம்மு ஸல்மாவே! மனிதனின் உள்ளம் இறைவனின் இரு விரல்களுக்கு மத்தியில் இருக்கின்றது இறைவன் எவரை உறுதியுடன் நிலைத்திருக்கும்படி செய்ய விரும்புகின்றானோ அவரை அவன் மார்க்கத்தில் உறுதியுடன் நிலைநிற்கும்படி செய்கின்றான். எவரை உறுதியுடன் நிலைநிற்காமல் இருக்கும்படி செய்ய அவன் விரும்புகின்றானோ அவரது உள்ளத்தை அவன் கோணலாக்கி விடுகின்றான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பாருங்கள்! எந்த அளவு அச்சத்திற்குரிய இடமாக இது இருக்கிறது. நாம் நமது உள்ளங்கள் கோணலாகி விடுவதிலிருந்தும் நம்மைப் பாதுகாப்பதற்கு எந்த அளவு துஆ செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது. ஏனென்றால் தப்பெண்ணங்களும் சிறிய சிறிய முறையீடுகளும் நம்மை எந்த அளவு இறைவனை விட்டும் தூரமாக விலக்கிக் கொண்டு சென்று விடுகிறது என்றால் இறுதியில் மனிதன் மார்க்கத்தையே இழந்தவனாக ஆகிவிடுகின்றான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உள்ளம் எப்போதாவது கோணலாகி விடுமா? நஊதுபில்லாஹ். அவ்வாறு ஒருபோதும் அந்த உள்ளம் கோணலாகி விடாது. இறைவனை நினைவு கூர்வதைத் தவிர அவர்களது உள்ளத்தில் வேறு எதுவுமே இருந்ததில்லை. **வத்தபிஊனி யுஹ்பிபுகுமுல்லாஹி** – என்னைப் பின்பற்றுங்கள். அல்லாஹ் உங்களை நேசிப்பான் என்ற அறிவிப்பை செய்யுமாறு அல்லாஹ் அவர்களிடம் கூறியுள்ளான். அதன் காரணமாக என்றும் உங்கள் பாவங்களை அல்லாஹ் மன்னிப்பான் என்றும் கூறியுள்ளான். அப்படி இருக்கும் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உள்ளம் கோணலாகி விடும் என்ற பேச்சுக்கே இடமில்லை. அவர்களைப் பின்பற்றுவதுதான் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கான வழியாக இருக்கின்றது. அவர்கள் ஒரு முறை, நான் தூங்குகின்ற போதுகூட எனது கண்கள் தூங்கினாலும் எனது மூளை எப்போதும் இறைவனையே நினைவுகூர்ந்து கொண்டிருக்கின்றது என்று கூறியுள்ளார்கள்.

எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு துஆ செய்திருப்பது நமக்கு ஒரு அழகிய முன்மாதிரியை நிலைநாட்டுவதற்கேயாகும். அவர்கள் தனது உம்மத்தைச் சார்ந்தவர்களது உள்ளம் ஒருபோதும் கோணலானதாக ஆகிவிடக்கூடாது என்பதற்காக இந்த துஆவை செய்திருந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) (வாக்களிக்கப்பட்ட மஸீஹ்) தோன்றும்போது முஸ்லிம்கள் அவர்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விரும்பியிருந்தார்கள். அந்தோ! முஸ்லிம்கள் இந்த முக்கியமான கருத்தைப் புரிய வேண்டும்.

இன்று முஸ்லிம்களின் நிலையைப் பார்க்கும்போது, அவர்கள் அல்லாஹ்வின் வெறுப்பை விலைகொடுத்து வாங்குவதை நாம் பார்க்க முடிகின்றது. அல்லாஹ் இவர்கள் மீது கருணை காட்டுவானாக!

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பிறகு ஒரு நபி வருவார் என்று ஏற்றுக்கொள்வதன் மூலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் **காத்தமுன்னபிய்யீன்** (நபிமார்களின் முத்திரை) ஆக இருக்கின்ற அந்த முத்திரையின் மீது களங்கம் ஏற்பட்டு விடுகிறது என்று இன்றைய பெயர்தாங்கி ஆலிம்கள் கூறுகின்றார்கள். திருக்குர்ஆன் இருக்கின்ற போது வேறு எந்த ஒரு மஸீஹ் அல்லது மஹ்தியின் வருகைக்கும் அவசியமில்லை என்றும் இவர்கள் கூறுகின்றார்கள். ஆனால் இதற்கு முன்பும் நான் கூறியதைப் போன்றே இத்துடன் இவர்கள் கிலாஃபத் தேவை என்பதை மறுக்கவில்லை. ஆனால் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றாமல் கிலாஃபத் தொடர்பாக நாம் கற்பனை செய்துகூட பார்க்க முடியாது என்பதை இந்த அறிவீனர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உம்மத்திலிருந்து வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றுவதுதான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் **காத்தமுன்னபிய்யீன்** ஆக இருக்கின்றார்கள் என்பதற்குரிய ஆதாரமாக இருக்கின்றது. திருக்குர்ஆனை நாங்கள்தான் புரிந்திருக்கின்றோம் என்பது இவர்களது வாதமாக இருந்தாலும் இந்த விஷயங்கள் இவர்களுக்கு புரியவில்லை. இவர்களால் திருக்குர்ஆனை புரியவும் முடியாது. இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் களுக்கு தான் திருக்குர்ஆனின் ஞானம் திறந்து தரப்படுகிறது. இந்தக் காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள்தான் இறைவனால் இதற்காக தேர்ந்தெடுக்கப் பட்டவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் திருக்குர்ஆனின் ஆழிய ஞானங்களை நமக்கு திறந்து அவற்றை விளக்கிக் கூறியுள்ளார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மார்க்க அறிவையும், இறைவன் புறமிருந்துள்ள தூய ஞானத்தையும் புரிந்து கொள்வதற்கும், அவற்றை பெற்றுக் கொள்வதற்கும் உண்மையான தூய்மையை பெற்றுக் கொள்வதும் தூய்மையற்ற வழிகளைக் கைவிடுவதும் மிகவும் அவசியமானதாகும். இதன் காரணமாகவே அல்லாஹ் திருக்குர்ஆனில் **லா யமஸ்ஸீஹூம் இல்லல் முதஹ்ஹரூன்** என்று கூறியுள்ளான். அதாவது, இறைவனின் தூய உள்ளம் உடையவர்களால்தான் புரிந்துகொள்ள முடியும். மேலும் அவர்கள் தூய இயல்புடையவர் களாகவும், தூய செயல்களையுடையவர்களாகவும் இருக்க வேண்டும். உலக தந்திரங்கள் மூலம் விண்ணிலிருந்து கிடைக்கும் அறிவை எவராலும் ஒருபோதும் பெற முடியாது.

**தொடர்ந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆனின் ஆழிய உண்மைகளானது எவர்களை அல்லாஹ் தனது கைகளால் தூய்மைபடுத்துகின்றானோ அவர்களுக்கே கிடைக்கின்றது.

**ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

எங்களுக்கு மஹ்தி மற்றும் மஸீஹின் தேவை இல்லை என்று சிலர் கூறுகின்றார்கள். திருக்குர்ஆன் எங்களுக்கு போதுமானதாக இருக்கின்றது. நாங்கள் நேர்வழியில் இருக்கின்றோம் என்றும் அவர்கள் கூறுகின்றார்கள். ஆனால் தூய்மையாளர்களைத் தவிர வேறு எவராலும் இந்த திருக்குர்ஆனை புரிந்து கொள்ள முடியாது என்பதை அவர்கள் அறிந்து வைத்துள்ளனர். இதன் காரணமாக இறைவனது கைகளால் தூய்மையாக்கப்பட்ட ஒரு திருக்குர்ஆன் விரிவுரையாளரின் தேவை அவர்களுக்கு இருந்தது. அவரைப் பார்வையுள்ளவராக இறைவன் ஆக்குகின்றான்.

இந்த காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைத்தான் அல்லாஹ் தனது கைகளால் தூய்மைப்படுத்தியுள்ளான். தன் தரப்பிலிருந்தும் அவர்களுக்கு திருக்குர்ஆனின் ஞனாத்தை வழங்கியுள்ளான். எனவே, எதிரிகள் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை எதிர்த்து நின்றவாறு திருக்குர்ஆனின் ஆழிய ஞானங்களை, இரகசியங்களை ஒருபோதும் அவர்களால் புரிந்து கொள்ள முடியாது. அவர்கள் எவ்வளவுதான் துஆ செய்தாலும் ஹஸ்ரத் மஸீஹ்

மவ்வூத் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்வதன் பக்கம் செயலளவில் அடியெடுத்து வைக்காத வரை அவர்களது உள்ளம் கோணலானதாகத்தான் இருக்கும்.

எனவே, இந்த முஸ்லிம்களின் நிலையைப் பார்த்த பிறகு அஹ்மதிகளாகிய நாம் அஹ்மதிகளாக இருப்பதற்கு இறைவனுக்கு நன்றி செலுத்துகின்ற அடியாராக இருப்பதுடன் எப்போதும் எல்லாவிதமான கோணல் தன்மையிலிருந்தும் தப்பிப்பதற்காக துஆவும் செய்து கொண்டிருக்க வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வுத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆனில் ஓரிடத்தில் **வகான பில் முஃமினீன ரஹீமா** – அதாவது இறைவனது ரஹீம் என்ற பண்பு நம்பிக்கையாளர்களுடன் மட்டுமே குறிப்பான சிறப்பான தொடர்பை உடையதாக இருக்கின்றது. அந்த பண்பிலிருந்தும் ஈமானற்ற காஃபிர்களுக்கும் கிளர்ச்சியில் ஈடுபடுபவர்களுக்கும் எவ்வித பங்கும் இருக்காது.

நம்பிக்கையாளர்களுடன் இறைவனது சிறப்பான கருணை இருக்கின்றது. அதைப்பற்றி எல்லா இடங்களிலும் இறைவன் தனது **ரஹீமிய்யத்** என்ற பண்பை எடுத்துக்கூறியே குறிப்பிட்டுள்ளான். பிரிதோரிடத்தில் அல்லாஹ் கூறுகின்றான்.

**இன்ன ரஹ்மதல்லாஹி கரிபுன் மினல் முஹ்ஸினீன்** – அதாவது இறைவனது கருணை நன்மை செய்கின்றவர்களுக்கு அருகில் இருக்கின்றது. பிரிதோரிடத்தில் அல்லாஹ் கூறுகின்றான்.

**இன்னல்லதீன ஆமனு வல்லதீன ஹாஜரு வஜாஹது ஃபீ ஸபீலில்லாஹி உலாயிக யர்ஜுன ரஹ்மதல்லாஹி வல்லாஹு கஃபூருர் ரஹீம்.**

எவர்கள் இறைவன் மீது ஈமான் கொண்டு தனது நாட்டை விட்டும் தனது நப்ஸை வணங்குவதை விட்டும் பிரிந்து விடுகின்றார்களோ, மேலும் இறைவழியில் முயற்சி செய்கின்றார்களோ அவர்கள் இறைவனின் கருணையை எதிர்பார்த்து அதன் மீது நம்பிக்கை வைத்துள்ளார்கள். இறைவன் அதிகமாக மன்னிப்பவனும் மீண்டும் மீண்டும் கருணை செய்யக்கூடியவனாகவும் இருக்கின்றான். இறைவனது கருணையின் அருள்கள் அதற்கு தகுதியுடையவர்களுக்குக் கண்டிப்பாக கிடைக்கிறது. அதை கேட்ட எவருக்கும் அந்த கருணை வழங்கப்படாமல் இல்லை. கருணை இறைவனிடமிருந்துதான் கிடைக்கின்றது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் ஈமானில் முன்னேற்றத்தை அடைய முயற்சி செய்பவர்களுக்கே அது கிடைக்கின்றது அவர்கள் நன்மை செய்பவர்களில் இணைய முயற்சி செய்கின்றார்கள். நன்மை செய்பவர்கள் யார்? நற்செயல்களில் ஈடுபடுபவர்களே நன்மை செய்பவர்களாக இருக்கின்றார்கள்.

அல்லாஹ்வின் கருணையை ஈர்ப்பதற்கு துஆக்கள் செய்வதுடன் எல்லாவிதமான கோணல்தன்மையிலிருந்தும் தப்பிப்பதற்கு முயற்சிகள் செய்ய வேண்டும். இதற்கு மிக அதிகமாக தேவை இருக்கிறது. கோணல்தன்மையிலிருந்து தப்பிப்பதற்காக முயற்சிகளை செய்வதுடன் நன்மை செய்பவர்களில் ஒருவராக ஆகுவதற்கும் முயற்சிகளை செய்ய வேண்டும். எவர்கள் நற்செயல்களைச் செய்ய முயற்சிகள் செய்கின்றார்களோ அவர்களைப் பற்றியே **முஹ்ஸினீன்** என்று இறைவன் குறிப்பிடுகின்றான். இப்படிப்பட்டவர்கள் தங்களது நற்செயல்களில் மிகவும் உயர்வான தரத்தைப் பெறுவதற்கு முயற்சிகள் செய்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளைக்கேற்ப இறைவனது பார்வை எப்போதும் நம்மீது இருக்கின்றது என்ற எண்ணத்துடன் அவர்கள் ஒவ்வொரு பணியையும் செய்யக்கூடியவர்களாக இருக்கின்றார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் குறிப்பிட்டிருப்பதற்கு ஏற்ப இப்படிப்பட்டவர்கள் தனது நஃப்ஸை வணங்குவதிலிருந்தும் விலகி இருப்பவர்களாக இருப்பார்கள். நற்செயல்கள் மூலம் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறக்கூடியவர்களாக அவர்கள் இருப்பார்கள்.

நாம் நமது இறைவணக்கங்களையும் நற்செயல்களையும் பாதுகாத்தவாறு, அல்லாஹ்வின் முன்பு குனிந்தவாறு எப்போதும் நமது நஃப்ஸை வணங்குவதிலிருந்தும் தப்பித்துக் கொள்பவர்களாக இறைவன்

நம்மை ஆக்குவானாக! எல்லாவிதமான கோணல் தன்மையிலிருந்தும் தப்பிப்பதற்கு இறைவனது உதவியை வேண்டியவாறு இறையருட்கொடைகளுக்கு மதிப்பளிப்பவர்களாக இறைவன் நம்மை ஆக்குவானாக. இந்த அவனது கருணை நம் மீதும் நமது சந்ததிகள் மீதும் தொடர்ந்து இருந்து வரட்டும்.

எனது பயணம் தொடர்பாக நான் துஆவிற்காக வேண்டுகின்றேன். அல்லாஹ்வின் அருளால் காதியானுக்கு நான் செல்ல இருக்கின்றேன். காதியானில் இன்-ா அல்லாஹ் ஆண்டு மாநாடு நடக்கும். அம்மாநாடு எல்லா வகையிலும் வெற்றிகரமாக நடைபெறவும் அருளுக்குரியதாக அமையவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதியையும் ஒவ்வொரு தீங்கிலிருந்தும் பாதுகாப்பாக வைப்பானாக. பல்வேறு நாடுகளிலிருந்தும் அதிகமாக மக்கள் அங்கு செல்ல இருக்கின்றார்கள். இந்திய அரசாங்கத்திற்கு பெரும் எண்ணிக்கையில் விசா வழங்குவதில் பல சிரமங்கள் இருக்கின்றது. சிலருக்கு விசா கிடைத்து விட்டது. சிலர் அதற்காக முயற்சிகளை செய்து கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கியிருக்கின்றது. அல்லாஹ் மாநாட்டிற்கு செல்கின்ற அனைவரையும் எல்லா வகையிலும் தனது பாதுகாப்பில் வைப்பானாக. இந்த தடைகளின் காரணமாக விருப்பம் இருந்தும் செல்ல முடியாதவர்களுக்கு அல்லாஹ் அதற்கான நற்கூலியை அவர்களுக்கு வழங்குவானாக. தொடர்ந்து துஆ செய்து கொண்டிருங்கள். தீங்கு விழைவிப்பவர்களின் தீங்கிலிருந்தும் எல்லா சமயங்களிலும் இறைவன் நம்மை பாதுகாப்பானாக. ஏனென்றால், எல்லா சமயங்களிலும் இவர்களது பார்வை ஜமாஅத்தின் மீது இருக்கின்றது. காதியானில் வசிப்பவர்களையும் எல்லாவிதமான தீங்கிலிருந்தும் அல்லாஹ் பாதுகாப்பானாக.

காதியானைத் தவிர இந்தியாவின் பல பகுதிகளில் வெகு தொலைவிலுள்ள ஜமாஅத்துகளில் அவர்களது விருப்பத்திற்கு ஏற்ப நான் சுற்றுப்பயணம் மேற்கொள்ள இருக்கின்றேன். அவர்களில் பலருக்கும் காதியான் வர முடியவில்லை. இந்தியா மிகவும் விரிவான ஒரு நாடாகும். ஏழைகள் அனைவரும் காதியான் வருவது சாத்தியமற்ற ஒன்றாகும். எனவே இந்தியாவின் சில நகரங்களில் நான் பயணம் மேற்கொள்ள இருக்கின்றேன். அல்லாஹ் இந்த இடங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும் எல்லா விதத்திலும் வெற்றிகரமாக நடைபெற அருள் புரிவானாக. ஆமீன். மேலும் எனது இந்த சுற்றுப்பயணம் எண்ணற்ற அருள்களை தன்னகத்தே கொண்டதாக அமையட்டுமாக. எதிரிகளின் ஒவ்வொரு தந்திரமும் தீய திட்டமும் தோல்வி அடையட்டும். மேலும் நாம் ஜமாஅத்தின் முன்னேற்றத்தை எப்போதும் காண்பதற்கு இறைவன் அருள் செய்வானாக. அல்லாஹ் எப்போதும் நமது குறைகளை திரையிட்டு மறைப்பானாக. அவனது அருள்கள், கருணை ஆகியவற்றிலிருந்தும் நாம் புறக்கணிக்கப்பட்டவர்களாக ஆகுவதிலிருந்தும் அல்லாஹ் எல்லா நேரத்திலும் நம்மை பாதுகாப்பானாக. ஆமீன்.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 21.11.2008**

Translated by : **Maulavi M. RAFEEQ AHMAD H.A.**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**